இந்திய உச்ச நீதிமன்றம்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் முனைவர் தனஞ்சய ஒய் சந்திரசூட்

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. எம்.ஆர். ஷா

2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள்

குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள். 231-232 / 2021

அரசுக்காக மாவட்ட காவல்துறை துணை கண்காணிப்பாளர்

-எதிர்-

டி.ஆர். என். சீனிவாசகன்

குற்றவியல் விசாரணை முறைச் சட்டம், 1973 – பிரிவு 311 – வரையறை – எதிர்மேல்முறையீட்டாளருக்கு எதிராக 2010 இல் பதிவு செய்யப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் முதல் தகவல் அறிக்கை - தலைமை பொறியாளர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவர் (அதன் பின் காலமானார்) – வழக்குத் தொடர அனுமதி அளிக்கப்பட்டுள்ளது – 2011 ஜூலையில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது – அரசுத் தரப்பு சாட்சியம் அக்டோபர் 2017-இல் முடிக்கப்பட்டுள்ளது - பிரிவு 311-இன் கீழ் அ.சா.1 (த.நா.மி.உ.ம.ப.க-வின் தலைவர்) மற்றும்

அ.சா.11 (காவல் துறை துணை கண்காணிப்பாளர்) ஆகியோரை விசாரணைக்கு திரும்ப அழைக்க 2019 ஆம் ஆண்டில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் – தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது – மேல்முறையீட்டில் – தீர்வு: பிரிவு 311-இன் தன்மை மற்றும் வரம்பைக் கருத்தில் கொண்டு, அரசுத் தரப்பு தாக்கல் செய்த விண்ணப்பங்களை அனுமதித்திருக்க வேண்டும் – மீள அழைக்கக் கோரப்படும் ஒரு நபரின் சாட்சியம் நியாயமான முடிவிற்கு அவசியம் என்று நீதிமன்றத்திற்கு தோன்றுகிறதா என்பதே உண்மையான பரிசோதனையாகும் – அரசுத் தரப்பில் த.நா.மி.உ.ம.ப.க-தின் வாரியம் அனுமதி வழங்கியது தொடர்பான ஆவணத்தின் நகலை முன்னிலைப்படுத்த அரசுத் தரப்பு கோரியுள்ளது – அவற்றை சான்றாவணமாக குறியீடு செய்ய அ.சா.1 மற்றும் அ.சா.11 மீள அழைக்க கோரப்பட்டுள்ளது – எதிர்மேல்முறையீட்டாளர் அந்த ஆவணம் வாரியத்தின் அனுமதியில்லாமல் த.நா.மி.உ.ம.ப.க-வின் தலைவர் கையொப்பம் செய்துள்ளார் என்று எதிர்வாதம் செய்துள்ளதால் அவ்வாவணம் வழக்கில் முடிவிற்கு முக்கியமானதாகும் – விண்ணப்பங்களை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதம் அரசுத் தரப்பில் விளக்கப்பட்டுள்ளது - எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரை நீக்கறவு செய்யப்படுகிறது – ஊழல் தடுப்புச் சட்டம், 1988 – துணைப்பிரிவுகள் 7, 12, 13(2) உடன் இணைந்த 13(1)(ஈ).

மேல்முறையீடுகளை அனுமதித்து, இந்நீதிமன்றம்,

தீர்வு :1.1. கு.வி.மு.ச. பிரிவு 311-இன் தன்மை மற்றும் வரம்பைக் கருத்தில் கொண்டு, அரசுத் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அனுமதிக்கபட்டிருந்தால் அது பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருந்திருக்கும். பிரிவு 311 எந்தவொரு

நீதிமன்றமும், கு.வி.மு.ச.-இன் கீழ் நடத்தப்படும் எந்தவொரு விசாரணை அல்லது வழக்கு விசாரணை அல்லது பிற நடவடிக்கைகளின் எந்த நிலையிலும் நீதிமன்றத்திற்கு வழக்கின் நியாயமான தீர்ப்பிற்கு ஒருவரது சாட்சியம் அவசியமானது என்று தோன்றினால் அவர் சாட்சியாக வரவழைக்கபடாமல் இருந்தாலும் அவரை சாட்சியாக வரவழைக்கவோ அல்லது முன்னிலையில் இருந்தால் விசாரிக்கவோ முடியும் என்றும் மேலும் அவர் ஏற்கனவே விசாரிக்கப்பட்டிருந்தால் அவரை மீள அழைத்து விசாரனை செய்யவோ மறுவிசாரணை செய்யவோ முடியும் என்று வழிவகை செய்கிறது. எனவே மீள அழைக்கக் கோரப்படும் நபரின் சாட்சியம் நியாயமான தீர்ப்பிற்கு அவசியம் என நீதிமன்றத்திற்கு தோன்றுகிறதா என்பதே உண்மையான பரிசோதனையாகும். தற்போதைய வழக்கில், அரசுத் தரப்பு த.நா.மி.உ.ம.ப.க வாரியம் வழங்கிய அனுமதி தொடர்புடைய ஆவணங்களின் நகலை தாக்கல் செய்ய முனைந்து, அதனை ஓர் சான்றாவணமாக குறியீடுசெய்துள்ளது, இதற்காக அ.சா.1 மற்றும் அ.சா.11 மீள அழைக்கப்பட வேண்டும் என்று அரசுத் தரப்பு கோருகிறது. இந்த மனுக்களில் அரசுத் தரப்பு இச்சாட்சியங்களை மீள அழைத்து தொடர்புடைய ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. ஏனெனில், எதிர்மேல்முறையீட்டாளர் த.நா.மி.உ.ம.ப.க-இன் அனுமதியின்றி அந்த ஆவணத்தில் கையொப்பமிட்டார் என்ற வாதத்தை முன்வைப்பதால், அவ்வாணங்கள் இவ்வழக்கின் முடிவிற்கு முக்கியமானது என்றும் குறிப்பிட்டுள்ளது. இம்மனுவினை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை பொறுத்து இவ்வழக்கினை நடத்திவந்த சிறப்பு அரசு வழக்குரைஞர் மாற்றத்தினால் ஏற்பட்டது என விளக்கமளிக்கப்பட்டது. பிரிவு 311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மீள அழைப்பு மனுவினை தள்ளுபடி செய்த உத்தரவு ஒழுங்கானது அல்ல.

எதிர்த்துரைக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவு நீக்கறவு செய்யப்பட்டது. அ.சா.1 மற்றும் அ.சா.11 ஆகியோரை மீள அழைக்க அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அனுமதிக்கப்படுகின்றன.

மஞ்சுதேவி –எதிர்- ராஜஸ்தான் மாநிலம், (2019) 6 எஸ்.சி.சி. 203 : (2019) 6 எஸ்.சி.ஆர். 68 – சார்வுறப்பட்டுள்ளது.

பார்வையிடப்பட்டுள்ள தீர்வு முடிவுகள்:

(2019) 6 எஸ்.சி.ஆர். 68 சார்வுறப்பட்டுள்ளது பத்தி 14

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு: குற்றவியல் மேல்முறையீட்டு எண்கள் 231-232 /2021.

குற்றவியல் முதலேற்பு மனு எண்கள். 7694/2019 மற்றும் 7816/2019 ஆகியவற்றில் மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தின் 24.06.2019 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிலிருந்து.

மேல்முறையீட்டாளர்களுக்காக வழக்குரைஞர்கள் திரு. எம். யோகேஸ் கண்ணா, எஸ். ராஜ ராஜேஸ்வரன், ஆதித்யா சதா, செல்வி. உமா பிரசுணா பசூ.

எதிர்மேல்முறையீட்டாளருக்காக வழக்குரைஞர்கள் திரு. செந்தில் ஜெகதீசன், செல்வி. மிர்னால் கன்வர்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புரை மாண்புமிகு நீதியரசர் முனைவர் தனஞ்சய ஒய். சந்திரசூட் அவர்களால் வழங்கப்பட்டது.

1 அனுமதி வழங்கப்படுகிறது.

2 இந்த மேல்முறையீடுகள் 24 ஜூன் 2019 தேதியிட்ட மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தின் கற்றறிந்த தனி நீதிபதியின் தீர்ப்புரை மற்றும் உத்தரவை எதிர்த்து எழுகின்றன.

3 மேல்முறையீட்டாளானவர் அரசு சார்பாக காவல்துறை துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரம்- IV. 13 ஜூலை 2010 அன்று, ஊழல் தடுப்புச் சட்டம், ("ஊழல் தடுப்புச் சட்டம்") 1988-இன் கீழ் எதிர்மேல்முறையீட்டாளர் (1-ஆம் குற்றம் சாட்டப்பட்டவர்) மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவர் (அதன் பின் காலமானார்) ஆகியோர்களுக்கு எதிராக முதல் தகவல் அறிக்கை எண் 14/2010 பதிவு செய்யப்பட்டது. எதிர்மேல்முறையீட்டாளராகவர் தமிழ்நாடு மின் உற்பத்தி பகிர்மானக் கழகத்தின் ("த.நா.மி.உ.ம.ப.க") தலைமைப் பொறியாளராக இருந்துள்ளார். ஊழியர் ஒருவரின் பணியிடை நீக்கத்தை ரத்து செய்ய கையூட்டு கேட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. 28 ஜூன் 2011 தேதியன்று, த.நா.மி.உ.ம.ப.க-தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஊழல் தடுப்புச் சட்டத்தின் படி எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக வழக்கு தொடர அனுமதி வழங்கி உள்ளார். மேல்முறையீட்டாளர் சார்பில், இந்த அனுமதியை த.நா.மி.உ.ம.ப.க வாரியத்தின் சார்பில் தலைவர் வழங்கியதாக வலியுறுத்தப்பட்டுள்ளது.

4 புலன் விசாரணையின் முடிவில், புலன் விசாரணை அதிகாரி 1973-ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணை முறைச் சட்டப் ("கு.வி.மு.ச.") பிரிவு 173(2)-இன் கீழ் 27 ஜூலை 2011-ஆம் தேதியன்று எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவர் ஆகியோருக்கு எதிராக ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகள் 7, 12 மற்றும் 13(2) உடன் இணைந்த 13(1)(ஈ)-இன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். ஆ.ப.எண். 9/2011 வழக்கின் வழக்கு விசாரணையின் போது அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரை சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அவர்கள் மூலம் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களும், சா.பொ.1 முதல் சா.பொ.10 வரையிலான சான்றுப் பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

5 இந்த வழக்கில் முக்கியமானது யாதெனில், த.நா.மி.உ.ம.ப.க-இன் தலைவரான அ.சா.1, 6 ஜூன் 2013-ஆம் தேதியன்று முதல் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது கவனத்தில் கொள்ள வேண்டும். 18 மார்ச் 2014 தேதியன்று அ.சா.1 எதிர்மேல்முறையீட்டாளரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மேலும் 17 ஜூலை 2014-ஆம் தேதியன்று உடன் குற்றம் சாட்டப்பட்டவரின் வேண்டுகோளின்படி மீள அழைக்கப்பட்டு மேலும் குறுக்கு விசாரணை செய்யபட்டுள்ளார். அ.சா.11, காவல் துறை துணை கண்காணிப்பாளரின் முதல் விசாரணையானது 01 பிப்ரவரி 2017-ஆம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு, அவர் 13 பிப்ரவரி 2017-ஆம் தேதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டு பின்னர் 27 பிப்ரவரி 2017-ஆம் தேதி மீள அழைக்கப்பட்டு குறுக்கு

விசாரணை செய்யப்பட்டுள்ளார். அரசுத் தரப்பு சாட்சியமானது 31 அக்டோபர் 2017-ஆம் தேதி விசாரணை முடிக்கப்பட்டு இறுதி வாதங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டுதுள்ளது.

6 அரசுத் தரப்பு வாதங்கள் 7 டிசம்பர் 2017-ஆம் தேதியன்று தொடங்கப்பட்டுள்ளது. எதிர்தரப்பு வாதங்கள் 16 டிசம்பர் 2017-ஆம் தேதி தொடங்கப்பட்டு 16 பிப்ரவரி 2018-ஆம் தேதியன்று முடிவடைந்துள்ளது. வழக்கானது அரசுத் தரப்பு இறுதி வாதங்களுக்காக 27 பிப்ரவரி 2018-ஆம் தேதியன்று ஒத்திவைக்கப்பட்டு 26 அக்டோபர் 2018-ஆம் தேதி வரை முப்பத்து மூன்று முறை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் நீதிபதி 25 ஜூன் 2018-ஆம் தேதி பணியிடம் மாற்றம் செய்யப்பட்டு இருந்ததால், வாதங்கள் இறுதியாக முடிக்கப்படவில்லை. 26 அக்டோபர் 2018-ஆம் தேதிக்கு பிறகு வழக்கானது முப்பத்து ஐந்து முறை ஒத்திவைக்கப்பட்டு, 11 மார்ச் 2019-ஆம் தேதியன்று அரசுத் தரப்பில் எழுத்து பூர்வ வாதங்களை சமர்பிப்பதற்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

7 இருந்தபோதிலும் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவர் ஆகியோர் மீது வழக்கு தொடர த.நா.மி.உ.ம.ப.க வாரியம் வழங்கிய அனுமதி ஆவணத்தை குறியீடு செய்வதற்காக, 11 பிப்ரவரி 2019-ஆம் தேதியன்று அ.சா.1 மற்றும் அ.சா.11-யை மீள அழைத்து விசாரணை செய்ய கு.வி.மு.ச. பிரிவு 311-இன் கீழ் குற்றவியல் பல்வகை மனு எண்கள் 224/2019 மற்றும் 225/2019 அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. எதிர்மேல்முறையீட்டாளர் இந்த மனுக்களை எதிர்த்திருந்தார்.

கு.வி.மு.ச. பிரிவு 311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுக்களை தள்ளுபடி செய்து 19 பிப்ரவரி 2019 தேதியிட்ட உத்தரவை விசாரணை நீதிபதி பிறப்பித்துள்ளார்.

8 அரசுத் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 482-இன் கீழ் உயர் நீதிமன்றத்தின் முன்பு மேற்படி உத்தரவுகளை எதிர்த்து குற்றவியல் முதலேற்பு மனுக்கள் 7694/2019 மற்றும் 7816/2019 ஆகியவை தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இவைகள் உயர் நீதிமன்றத்தால் 24 ஜூன் 2019 தேதியிட்ட எதிர்த்துரைக்கப்பட்ட உத்தரவின்படி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன. அ.சா.1 மற்றும் அ.சா.11 முந்தைய சாட்சியத்தை பின்னிட்டு மேற்படி விண்ணப்பங்கள் அரசுத் தரப்பினால் காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று உயர் நீதிமன்றம் கருத்துரைத்துள்ளது. ஆகையால் மேல்முறையீட்டாளர் இந்த நீதிமன்றத்திற்கு பயணித்துள்ளார்.

9 ஜூலை 9, 2020 தேதியில் இந்நீதிமன்றம் காலதாமதத்தை மன்னித்தும் மேல்முறையீட்டாளர் சார்பாக வலியுறுத்தப்பட்ட சமர்ப்பிப்புகளை பதிவு செய்தும் பின்வரும் உத்தரவை பிறப்பித்தது.

"1. காலதாமதம் மன்னிக்கப்படுகிறது.

2. மனுதாரர் சார்பில் திரு. என். லோகேஷ்கண்ணா முன்னிலையாகி, 28 ஜூன் 2018 தேதியிட்ட அனுமதி உத்தரவான சிறப்பு அனுமதி மனுவுடன் இணைப்பு பி-4 விசாரணையில் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அனுமதி உத்தரவின் சங்கதிகளை குறிப்பிட்டு நியமனம் செய்யும் அதிகாரம் உடையது வாரியம் என்றும்

அனுமதி வழங்குவதற்கான ஆவணங்கள் வாரியத்தின் முன் வைக்கப்பட்டன என்றும் உத்தரவில் ஒரு குறிப்பு உள்ளது என்று கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பிக்கிறார். கற்றறிந்த வழக்குரைஞர் வாரியத்தின் முன்பு நடந்த நடவடிக்கைகளை குறியீடு செய்வதற்காக அரசுத் தரப்பு முயல்கிறது என்று சமர்ப்பித்தார்.

3. ஆறு வாரங்களில் திரும்பப் பெறும் அறிவிப்பு வெளியிடுக.

4. கூடுதலாக நேரடி அழைப்பாணையும் அனுமதிக்கப்படுகிறது.

5. இதற்கிடையில், இன்று முதல் எட்டு வார காலத்திற்கு சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழான வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சென்னை முன்பு நிலுவையில் உள்ள ஆ.ப.எண்.9/2011-இன் அனைத்து நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க உத்தரவிடப்படுகிறது."

10 அறிவிப்பு பிறப்பித்த உத்தரவைத் தொடர்ந்து, எதிர்மேல்முறையீட்டாளர் சார்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. செந்தில் ஜெகதீசன் முன்னிலையாகி எதிர் ஆணையுறுதி ஆவணம் தாக்கல் செய்தார்.

11 மேல்முறையீட்டாளர் சார்பில் முன்னிலையான வழக்குரைஞர் திரு. எம். யோகேஷ் கண்ணா அவர்கள் 28 ஜூன் 2011-ஆம் தேதியிட்ட அனுமதி உத்தரவு ஏற்கனவே வழக்கு விசாரணையின் போது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று சமர்பித்தார். முக்கியமாக, அ.சா.1 மற்றும் அ.சா.11 மீள அழைப்பதற்கான காரணம்

மேல்முறையீட்டாளர் தலைமைப் பொறியாளராகப் பணிபுரிந்த த.நா.மி.உ.ம.ப.க வாரியத்திற்கு வழங்கப்பட்ட குறிப்பின் நகலை ஆதாரமாகக் குறிக்கவும் பதிவேட்டில் கொண்டுவருவதும் ஆகும். பிரிவு 311-இன் வரம்பைக் கருத்தில் கொண்டு, மனுக்கள் அனுமதிக்கபட்டிருக்க வேண்டும் என்று கற்றறிந்த வழக்குரைஞர் சமர்ப்பிக்கிறார், குறிப்பாக நீதித்துறை அதிகாரி இடமாற்றத்தினால் வழக்கின் இறுதி வாதங்களை முடிக்க இயலாத சங்கதியையும் வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளதையும் கருத்தில் கொண்டும், ஊழல் தடுப்புச் சட்டப் பிரிவுகளில் இருந்து எழும் நடவடிக்கைகளின் தன்மை மற்றும் நோக்கம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், தொடர்புடைய ஆவணமான த.நா.மி.உ.ம.ப.க வாரியம் வழங்கிய உத்தரவை பதிவேட்டில் முன்வைக்க அரசுத் தரப்பிற்கு சுதந்திரம் வழங்கப்பட்டால் அது பொருத்தமானதாகவும் நீதியின் நலனுக்காவும் நிற்கும் என்று மேலும் சமர்ப்பிக்கப்பட்டது.

12 மறுபுறம், திரு. செந்தில் ஜெகதீசன் அ.சா.1 மற்றும் அ.சா.11-இன் சாட்சியங்களை குறித்து இந்தீமன்றத்தின் கவனத்தை ஈர்த்தார். வாரியத்தின் கூட்ட நடவடிக்கைகளாக சொல்லப்படுவது இணைப்பு பி-2 ஐ (எதிர்-ஆணையுறுதி ஆவணத்தின் இணைப்பு ஆர்-2 தாக்கல் செய்யப்பட்ட ஒரு நகல்) குறிப்பிட்டு, அவற்றில் வாரியத்தின் உறுப்பினர்களின் கையொப்பங்கள் இல்லை என்று சமர்ப்பித்தார். மேலும் த.நா.மி.உ.ம.ப.க-இன் தலைவரான அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிர்மேல்முறையீட்டாளர் மற்றும் உடன் குற்றம் சாட்டப்பட்டவர் மீது வாரியத்திற்கு குறிப்பிடாமல் வழக்குத் தொடர அனுமதி

வழங்கியதாகவும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவுகளின் கீழ் அவ்வாறு செய்ய அவருக்கு உரிமை உள்ளது என்றும் வலியுறுத்தி சமர்பித்தார்.

13 எங்கள் பார்வையில், கு.வி.மு.ச. பிரிவு 311-இன் தன்மை மற்றும் வரம்பைக் கருத்தில் கொண்டு, அரசுத் தரப்பால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அனுமதிக்கபட்டிருந்தால் அது பொருத்தமானதாகவும் சரியானதாகவும் இருந்திருக்கும். பிரிவு 311 எந்தவொரு நீதிமன்றமும், கு.வி.மு.ச.-இன் கீழ் நடத்தப்படும் எந்தவொரு விசாரணை அல்லது வழக்கு விசாரணை அல்லது பிற நடவடிக்கைகளின் எந்த நிலையிலும் நீதிமன்றத்திற்கு வழக்கின் நியாயமான தீர்ப்பிற்கு ஒருவரது சாட்சியம் அவசியமானது என்று தோன்றினால் அவர் சாட்சியாக வரவழைக்கபடாமல் இருந்தாலும் அவரை சாட்சியாக வரவழைக்கவோ அல்லது முன்னிலையில் இருந்தால் விசாரிக்கவோ முடியும் என்றும் மேலும் அவர் ஏற்கனவே விசாரிக்கப்பட்டிருந்தால் அவரை மீள அழைத்து விசாரணை செய்யவோ மறுவிசாரணை செய்யவோ முடியும் என்று வழிவகை செய்கிறது. எனவே மீள அழைக்கக் கோரப்படும் நபரின் சாட்சியம் நியாயமான தீர்ப்பிற்கு அவசியம் என நீதிமன்றத்திற்கு தோன்றுகிறதா என்பதே உண்மையான பரிசோதனையாகும்.

14 மஞ்சுதேவி -எதிர்- ராஜஸ்தான் மாநிலம்("(2019) 6 எஸ்.சி.சி. 203.") என்ற தீர்வுமுடிவில் இந்நீதிமன்றத்தின் இரு நீதிபதிகள் கொண்ட அமர்வு, பிரிவு 311-இன் கீழ் ஒரு மனுவை, வழக்கு நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது (அவ்வழக்கில் 10

வருடங்கள்) என்ற ஒரே காரணத்தின் அடிப்படையில் நிராகரிக்க முடியாது என்று தீர்மானித்துள்ளது. மாறாக, ஒரு வழக்கில் தேவையான மற்றும் முக்கிய ஆதாரங்கள் அனைத்தையும் பதிவேட்டில் கொண்டுவந்த பின்பு நியாயமான முடிவை உறுதி செய்யும் அடிப்படை தேவையை ஒரு வழக்கின் நீளம் / காலம் இடமாற்றம் செய்ய முடியாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு முதன்மையான சாட்சியை விசாரிக்க வேண்டும் எனப் வேண்டுரை கோரும் பொழுது அந்த வழக்கின் வயது மட்டுமே தீர்மானத்தின் பொருண்மையாக அமையாது. நீதிமன்றத்திற்காக பேசிய நீதியரசர் தினேஷ் மகேஸ்வரி, பிரிவு 311-இன் அடிப்படையான கொள்கைகளை பின்வருமாறு விளக்கினார்.

"10. பிரிவு 311 கு.வி.மு.ச.-இன் கீழ் உள்ளதைப் போன்ற விருப்புரிமை அதிகாரங்கள், பதிவேட்டை நேராக வைத்திருக்கவும், ஆதாரங்களைப் பொறுத்தவரை எந்தவொரு தெளிவின்மையையும் நீக்குவதற்கும், எவருக்கும் பாரபட்சம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும், அவசியமான மற்றும் பொருத்தமான ஒவ்வொரு நடவடிக்கையும் நீதிமன்றத்தால் எடுக்கப்படுவதையும் உறுதிச் செய்வதையே நோக்கமாக கொண்டதாகும். பிரிவு 311 கு.வி.மு.ச.-இன் அடிப்படையான கொள்கைகளை மற்றும் அதன் கீழ் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் ஆகியவை இந்த நீதிமன்றத்தால் பல தீர்வுமுடிவுகளில் விளக்கப்பட்டுள்ளன. (மோகன்லால் ஷாம்ஜி சோனி -எதிர்- இந்திய அரசு, 1991 சப் (1) எஸ்.சி.சி. 271 : 1991 எஸ்.சி.சி. (கிரிமினல்) 595; ஜாஹிரா ஹபிபுல்லா எச். ஷேக் –எதிர்- குஜராத் மாநிலம், (2004) 4 எஸ்.சி.சி. 158 : 2004 எஸ்.சி.சி. (கிரிமினல்) 999; மினா லலிதா பருவா –எதிர்- ஒரிசா மாநிலம், (2013) 16 எஸ்.சி.சி. 173 : (2014) 6 எஸ்.சி.சி. (கிரிமினல்) 218; ராஜாராம் பிரசாத் யாதவ் –எதிர்- பீகார் மாநிலம், (2013) 14 எஸ்.சி.சி. 461 : (2014) 4 எஸ்.சி.சி.

(கிரிமினல்) 256 மற்றும் நடாஷா சிங் –எதிர்- சிபிஐ, (2013) 5 எஸ்.சி.சி. 741: (2013) 4 எஸ்.சி.சி. (கிரிமினல்) 828). நடாஷா சிங் –எதிர்- சிபிஐ, (2013) 5 எஸ்.சி.சி. 741: (2013) 4 எஸ்.சி.சி. (கிரிமினல்) 828), வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்வதற்காக குற்றம் சாட்டப்பட்டவரால் மனு தாக்கல் செய்யப்பட்டாலும், அது தொடர்பான கொள்கைகளின் அடிப்படையில் பிரிவு 311-இன் கீழ் உள்ள அதிகாரத்தை குறித்து இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு கருத்துரைத்துள்ளது. (எஸ்.சி.சி. பக்கங்கள் 746 & 748-49, பத்திகள் 8 & 15)

"8. எந்த ஒரு விசாரணையிலோ அல்லது வழக்கு விசாரணையிலோ அல்லது குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் வேறு எந்த நடவடிக்கைகளிலோ ஒருவரின் சாட்சியம் நியாயமான முடிவினை அடைவதற்கு அவசியம் என்று தோன்றும் பொழுது நீதிமன்றம் அவரை வரவழைக்கவும் அல்லது முன்னிலையில் இருந்தால் விசாரிக்கவும், அல்லது எந்த ஒரு நபரை சாட்சியாக விசாரிக்க அழைக்கவும் அல்லது ஏற்கனவே விசாரிக்கப்பட்டிருந்தால் அவரை மீள அழைத்து விசாரணை செய்யவும் அதிகாரம் அளிக்கிறது. சந்தேகத்திற்கு இடமின்றி கு.வி.மு.ச நீதிமன்றத்திற்கு பரந்த விருப்புரிமை அதிகாரத்தை வழங்கியுள்ளது, ஆனால் இவ்வதிகாரத்தை தன்னிச்சையாக அல்லாமல் நியாயமாக பயன்படுத்தப்பட வேண்டும். இந்தச் சூழலில் நீதிமன்றத்தின் அதிகாரம் பரந்து விரிந்துள்ளது, மேலும் அதன் பயன்பாட்டையும் எந்த ஒரு நபரையும் வழக்கு அல்லது பிற நடவடிக்கையில் எந்தவொரு நிலையிலும் சாட்சியாக அழைக்கலாம்.

இரு தரப்பினர்களின் மனுக்கள் தாக்கல் செய்யப்படாமல் இருக்கும் பொழுதும் சுயமாக இந்த அதிகாரத்தை பயன்படுத்த நீதிமன்றம் தகுதியுடையது. எவ்வாறாயினும், வழக்கின் நியாயமான முடிவுக்கு வருவதற்கு, அத்தகைய சாட்சியை விசாரிப்பது அல்லது மேலும் விசாரணைக்கு அவரை திரும்ப அழைப்பது உண்மையில் அவசியம் என்று நீதிமன்றம் தன்னை திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும்.

****

15. இச்சட்டப் பிரிவின் நோக்கமும் வரைவெல்லையும், ஓர் வழக்கின் உண்மையை கண்டறிந்து, தொடர்புடைய அனைத்து பொருண்மைகளையும், பொருண்மைகளின் சரியான நிரூபணங்களை பெற்று ஓர் நியாயமான தீர்வை அடைய நீதிமன்றத்திற்கு செயலதிகாரமளிப்பதாகும். இவ்வதிகாரத்தை, மனம்போல் நடப்பதோ அல்லது தன்னிச்சையாகவோ பயன்படுத்தாமல், நியாயமாகப் பயன்படுத்துதல் வேண்டும், ஏனெனில் அவ்வகையான மனம்போல் அல்லது தன்னிச்சையானப் பயன்பாடு விரும்பத்தகாத விளைவுகளுக்கு வழிவகுக்கும். அரசுத் தரப்பு அல்லது எதிர்த் தரப்பினரின் குறைகளை இட்டு நிரப்புவதற்காக மட்டுமோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவருக்கு தீவிர பாதகம் எற்படுத்தும் வகையிலோ அல்லது குற்றம் சாட்டப்பட்டவரின் தடுப்பு வாதத்திற்கு கடுமையான பாரபட்சம் ஏற்படும்வகையில் கு.வி.மு.ச. பிரிவு 311-இன் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை அனுமதிக்கக்கூடாது. மேலும் மறுவிசாரணை என்ற மாறுவேடத்தின்

கீழ் கூடுதல் சாட்சியங்களை பெறுவதும், ஒரு தரப்பினருக்கும் எதிராக வழக்கின் தன்மையை மாற்றுவதும் கூடாது. சாட்சிகளால் அளிக்க முன்வரும் சாட்சியம் வழக்கின் பிரச்சனையில் முக்கியமானதாக இருக்குமாயின் இத்தகைய அதிகாரத்தை பயன்படுத்தலாம். எவ்வாறிருப்பினும் மறுப்புக்கான வாய்ப்பு மாற்றுதரப்பினருக்கு வழங்கப்பட வேண்டும். பிரிவு 311 கு.வி.மு.ச-இன் கீழ், வழங்கப்பட்ட அதிகாரம் நீதியை நிலைநிறுத்துவதற்காகவும், வலுவான மற்றும் மதிப்புடைய காரணங்களுக்காவும் நீதிமன்றத்தால் மிகுந்த எச்சரிக்கையடனும், நுண்ணறிவுடனும் பயன்படுத்தப்பட வேண்டும். "எந்தநீதிமன்றம்", "எந்தநிலையிலும்", அல்லது "எந்த விசாரணை, வழக்கு விசாரணை அல்லது பிற நடவடிக்கைகள்", "ஏதேனும் நபர்" மற்றும் "அத்தகைய நபர்" போன்ற வார்த்தைகளின் பயன்பாடு தெளிவாக உச்சரிக்கப்பட்டுள்ள இந்தப் பிரிவின் பரந்துபட்ட சாத்தியமான சொற்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் நீதிமன்றத்தின் விருப்புரிமையை எந்த வகையிலும் கட்டுப்படுத்தவில்லை. எனவே வழக்கின் நியாயமான தீர்ப்பிற்கு, புதிய சான்றுகள் பெறப்பட வேண்டியது அவசியமானால் அதிலிருந்து தப்பிக்க இயலாது. எனவே, கூறப்பட்ட சாட்சியை அழைக்கவோ / மீள அழைக்கவோ உண்மையில், வழக்கின் நியாயமான தீர்ப்புக்கு இன்றியமையாததா என கண்டறிவதே தீர்மானிக்கும் காரணியாகும். (அசலில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது).

15 தற்போதைய வழக்கில், அரசுத் தரப்பு த.நா.மி.உ.ம.ப.க வாரியம் வழங்கிய அனுமதி தொடர்புடைய ஆவணங்களின் நகலை தாக்கல் செய்ய முனைந்து, அதனை ஒர் சான்றாவணமாக குறியீடுசெய்துள்ளது, இதற்காக அ.சா.1 மற்றும் அ.சா.11 மீள அழைக்கப்பட வேண்டும் என்று அரசுத் தரப்பு கோருகிறது. இந்த மனுக்களில் அரசுத் தரப்பு இச்சாட்சியங்களை மீள அழைத்து தொடர்புடைய ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. ஏனெனில், எதிர்மேல்முறையீட்டாளர் த.நா.மி.உ.ம.ப.க-இன் அனுமதியின்றி அந்த ஆவணத்தில் கையொப்பமிட்டார் என்ற வாதத்தை முன்வைப்பதால், அவ்வாணங்கள் இவ்வழக்கின் முடிவிற்கு முக்கியமானது என்றும் குறிப்பிட்டுள்ளது. இம்மனுவினை தாக்கல் செய்ய ஏற்பட்ட காலதாமதத்தை பொறுத்து இவ்வழக்கினை நடத்திவந்த சிறப்பு அரசு வழக்குரைஞர் மாற்றத்தினால் ஏற்பட்டது என விளக்கமளிக்கப்பட்டது, அரசுத் தரப்பு மனுவின் தொடர்புடைய பகுதி கீழ்கண்டவாறு மீள் உருவாக்கப்படுகிறது:

> "சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் இவ்வழக்கை நடத்தும் கூடுதல் சட்ட ஆலோசகர் திரு. டி. பன்னீர் செல்வம், காஞ்சிபுரம் மாவட்டத்தின் குற்றவழக்கு தொடுப்பு துறையின் துணை இயக்குநராக பணிமாற்றம் செய்யப்பட்டதால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு தலைமையிடத்தின் கூடுதல் சட்டச் ஆலோசகரான திரு. பாண்டிராஜன் அவர்கள் சிறப்பு அரசு வழக்குரைஞராக நியமிக்கப்பட்டுள்ளார்.
>
> .....

சமர்ப்பிக்கப்படுவதாவது, அ.சா.ஆ.1 அனுமதி உத்தரவு வாரியம் வழங்கிய உத்தரவையையே காட்டுகிறது. ஆனால், எதிர்தரப்பினர் அத்தகைய உத்தரவு வாரியத்தால் வழங்கப்படவில்லை என்றும் அது தலைவரால் வழங்கப்பட்டது என்றும், அவர் அனுமதி அளிப்பதற்கு பொருத்தமான நபர் அல்ல என்ற நிலைப்பாட்டினை எடுத்துள்ளார்.

சமர்ப்பிக்கப்படுவதாவது, குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யும்போது, புலன்விசாரணை அதிகாரி வாரியத்தின் அனுமதி உத்திரவினைப் பெற்றுள்ளார் மற்றும் அதனை மாண்புமிகு நீதிமன்றத்தில் சமர்பிக்கப்படவில்லை.

சமார்பிக்கப்படுவதாவது, அரசுத் தரப்பு வாதத்திற்கு ஆதரவாக, நியாயமான தீர்ப்பை வழங்குவதற்காக த.நா.மி.உ.ம.ப.க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் படி அனுமதி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என இம்மாண்புமிகு நீதிமன்றம் உளநிறைவு கொள்வதற்காக த.நா.மி.உ.ம.ப.க தொடர்புடைய ஆவணத்தைக் குறியிடுவது அவசியமாகிறது.

.....

சமர்ப்பிக்கப்படுவதாவது, அனுமதி தொடர்புடைய ஆவணங்களை குறியீடு செய்வதற்காக அ.சா.1 மற்றும் அ.சா.11-யை மீள அழைப்பது என்பது குறை என்றோ அல்லது இடைவெளிகளை இட்டுநிரப்புதல் எனப் பெயரிடக்கூடாது. ஆனால் மாண்புமிகு நீதிமன்றம் சரியான முடிவை வழக்கில் சென்றடைய செய்யப்படும் உதவி என கருத வேண்டும்.

16 சந்தேகத்திற்கு இடமின்றி, எதிர்மேல்முறையீட்டாளருக்கு கண்டிப்பாக சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புகள் உள்ளன என நாங்கள் கருத்தில் கொள்கின்றோம். ஆகவே, எதிர்மேல்முறையீட்டாளரின் சார்பில் திரு. செந்தில் ஜெகதீசன் வலியுறுத்தியது போல், அ.சா.1 மற்றும் அ.சா.11 ஆகியோர்களின் சாட்சியத்தில் உள்ள சங்கதிகள் விசாரணை நீதிபதி மதிப்பீடு செய்ய வேண்டியவையாக இருப்பதால், அவைகள் குறித்து சமர்பிக்கப்பட்ட சங்கதிகளின் தகுதியின் அடிப்படையில் நாங்கள் எங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்தவில்லை. இருந்த போதிலும், நாங்கள் பிரிவு 311-இன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மீள அழைப்பு மனுவினை தள்ளுபடி செய்த உத்தரவு ஒழுங்கானது அல்ல என்ற பார்வையை கொண்டுள்ளோம். அவ்வாறாக நாங்கள் இந்த மேல்முறையீட்டை அனுமதிக்கிறோம். எதிர்ப்புக்குள்ளான உத்தரவையும், கடந்த 24 ஜூன் 2019 அன்று உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை நீக்கறவு செய்கின்றோம். அ.சா.1 மற்றும் அ.சா.11 ஆகியோரை மீள அழைக்க அரசுத் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் அவ்வாறாக அனுமதிக்கப்படுகின்றன. எதிர்மேல்முறையீட்டாளர் அச்சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யும் உரிமைகளை பெற்றுள்ளார்.

17 வழக்கு விசாரணை நீண்டகாலமாக நிலுவையில் இருப்பதால், நாங்கள் 31 ஜூலை 2021-க்குள் இவ்வழக்கு விசாரணையை முழுவதுமாக முடிக்கும்படி வழிகாட்டும் உத்தரவினை பிறப்பிக்கின்றோம்.

18 ஏதாவது மனுக்கள் நிலுவையில் இருக்குமாயின் அவைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

மேல்முறையீடுகள் தீர்மானிக்கப்பட்டது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திகொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப்பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".